**பாத்ததும்பர பிரதேச சபை - 2024**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாத்ததும்பர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாத்ததும்பர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும்

எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் வாகனங்கள் சேவை நிலையத்தை மேம்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 3,800,000 செலவிடப்பட்டிருந்த போதும் ரூபா 380,000 என ரூபா 3,420,000 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக. | கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் பொருட் கணிப்பீட்டின் போது அகற்றப்பட்டிருந்த ரூபா 322,515 ஆன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக. | கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு இயந்திரங்கள் மற்றும் பொறிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெகோ லோடர் (JCB) பெறுமதி ரூபா 16,695,000 தொகையை மோட்டார் வாகனங்கள் மட்டும் வண்டில்கள் கணக்கின் கீழ் ரூபா 7,000,000 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டிருந்த 7 இயந்திர அலகுகளின் பெறுமதி ரூபா 103,279 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது அவ்வாறே இயந்திரங்கள் மற்றும் பொறிகள் மீதியில் 20 அலகுகளின் மொத்தம் ரூபா | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக. | கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 79,717,999 இரண்டு முறை பதிவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | முன்னைய ஆண்டுக்குரிய நீதிமன்ற தண்டபண வருமானம் மொத்தம் ரூபா 248,332 மற்றும் முத்திரை கட்டண வருமான மொத்தம் ரூபா 103,253,780 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்ற தண்டபண வருமானம் ரூபா 265,852 தொகை மற்றும் முத்திரை கட்டண வருமானம் ரூபா 10,843,070 தொகையும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய அறிவித்தல் பதாகை கட்டணங்கள் ரூபா 358,760 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக. | கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (எ) | 12 அபிவிருத்தி திட்டங்களின் மீளாய் வாண்டிற்குரிய பிடிகாசு ரூபா 817 678 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட 11கணக்கு விடயங்களின் மீதிகள் அதற்குரிய பயன்பாட்டு பதிவேடுகளில் காணப்படும் மீதிகளுடன் ஒப்பிடும் போது 13,140,916 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | கண்டுபிடித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்கு மீதிகளை உரிய பயன்பாட்டு பதிவேட்டு மீதிகளுடன் ஒப்பிடப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 768,513 கூட்டுத்தொகையான சொத்து விடயமொன்றும் 02 பொறுப்பு மீதிகளுக்குரிய பொருட் பதிவேடு, கோவைகள், மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் பௌதீக இருப்பு என்பன சமர்ப்பிக்காமை காரணமாக அவற்றை திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | பரீட்சித்து பதிவேடுகள் கோவைகளைத் தயாரிப்பதாக. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை உறுதிப்படுத்தும் பதிவேடுகள் மற்றும் கோவைகள் பேணப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்** | | | |
| | 218 ஆம் பிரிவு | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொண்டு அவற்றின் இருப்பு உறுதிப்படுத்தப் பட வேண்டும். |
| (ஆ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| | நி.பி. 571(3) | 2014 முதல் 2020 வரையான காலப் பகுதியில் காலாவதியான ரூபா 1,055,811 ஆன காலாவதியான 18 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 117,240,205 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 26,164,031 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | | 2024 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2024 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2024 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2023 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 6,380,000 | 7,838,700 | 6,924,108 | 5,769,002 | 5,793,650 | 7,156,980 | 7,221,788 | 4,854,409 |
| (ii) | வாடகை | 4,273,152 | 5,343,564 | 5,358,243 | 619,389 | 4,273,152 | 5,064,798 | 4,804,288 | 634,069 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 3,416,900 | 2,849,846 | 2,849,846 | - | 3,180,000 | 3,180,000 | 3,572,481 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 98,346,407 | 138,632,329 | 139,408,844 | 28,560,889 | 94,790,379 | 48,534,638 | 44,570,296 | 29,337,405 |
| | | 112,416,459 | 154,664,439 | 154,541,041 | 34,949,280 | 108,037,181 | 63,936,416 | 60,168,853 | 34,825,883 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

**சபையின் வருமன சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 5,769,002 ஆக இருந்தது. அதில் ஒரு அலகின் வீதவரி நிலுவை ரூபா 5,000 இனை மிகைத்த 148 ஆதனங்களிலிருந்து மொத்தம் ரூபா 1,341,413 ஆன மீதியொன்றாக இருந்தது. | சட்ட நடைமுறைகள் எடுத்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) ஏனைய வருமானம்** | | |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 2,282,096 ஆக இருந்ததுடன் அதில் நீர்க் கட்டண நிலுவை ரூபா 5,000 இனை மிகைத்த 118 நீர்பாவனையாளர் களிடமிருந்து மொத்தம் ரூபா 1,026,229 ஆன நிலுவை மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | துண்டித்தல் மூலம் நீர்க் கட்டணங்கள் அறவிடப்படுவதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரசேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால்

நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்ளாமை** | | |
| | 2020 செப்தம்பர் 28 ஆந் திகதிய 2020/06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் மிகை நிதியை வருமானம் ஈட்டக்கூடிய திட்டங்கள் மற்றும் சபையின் சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்காக ஈடுபடுத்தாமல் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா **84,673,708** கூட்டுத்தொகையான பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த துடன் நடைமுறைக் கணக்கில் ரூபா 124,082,117 தொகை விளைவற்ற வகையில் காணப்பட்டன. | வட்டி வருமானத்தின் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக. | மிகை பணத்தை பிரதேச அபிவிருத்திக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| **(ஆ)** | **கைவிடப்பட்ட செயற்பாடுகள்** | | |
| | புதிய அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குரிய மொத்த கிரய மதிப்பீடு ஒன்றும் திட்டமொன்றும் தயாரிக்காமல் 2021 ஆம் ஆண்டில் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு 04 கட்டங்களின் கீழ் ரூபா 20,272,380 செலவிடப்பட்டு நிலமாடி கொங்கிரீட் கூரையொன்றுடன் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தின் எஞ்சிய வேலைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. | சிக்கல்களை தேர்வு செய்து எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக. | கட்டிடத்தின் நிர்மாணம் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| **(இ)** | **திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்** | | |
| | குண்டசாலை பிரதேச சபை மற்றும் பாத்ததும்பர பிரதேச சபை ஒன்றிணைந்து செயல்படுத்துகின்ற ஜப்பான் தொழில்நுட்ப சுவாயு தானியங்கி மற்றும் சேதன பசளை உற்பத்தி நிகழ்ச்சி திட்டத்திற்காக 2016 ஒக்டோபர் 12 ஆம் திகதி இணக்கப்பாட்டு உடன்படிக்கை ஒன்று இரு தரப்பினரும் கையொப்பமிட்டு பாத்ததும்பற பிரதேச சபை ரூபா 21,559,975 செலவிடப்பட்டிருந்த போதும் 2022 ஜூலை முதல் குண்டசாலை பிரதேச சபையால் உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு எடுக்கவில்லை உடன்படிக்கை மீறியதால் நிதி நட்டம் ஒன்றை அறவிடுவதற்கோ அல்லது சிக்கலொன்று ஏற்படும் போது செயற்பட | எதிர்காலத்தில் கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | செயற்திட்டத்திற்கு உரிய உடன்படிக்கை பிரகாரம் பொறுப்பாக நடவடிக்கை எடுத்து செயற் திட்டத்தை வெற்றிகரமாக பேணி செல்ல வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேண்டிய விதம் உடன்படிக்கையில் குறிப்பிடப்படபட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் சிக்கல்கள் தீர்வு செய்யப்பட்டு இருக்கவில்லை. | | |

**(ஈ) சுற்றாடல் சிக்கல்கள்**

| | | |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 93 (ஆ) பிரிவின் பிரகாரம் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேசத்தின் வீடுகளில் மலக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக முறையாக குழிகளை உரிய காலப் பகுதியில் வெளியெற்றுவதற்கும் வெறுமையாக்குவதற்கும் முடியுமான வகையில் கலிவண்டி சேவை ஒன்று நடத்திச் செல்லப்பட்டு இருக்க வில்லை. | கலி வலி வண்டி ஒன்று இருந்த போதும் வெளியேற்றுவதற்கு இடம் ஒன்று இல்லை என்பதாக. | சிக்கல்களை தீர்வு செய்து பொதுமக்கள் தேவைப்பாடுகளை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு பெற வேண்டிய 04 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 6,630,491 ஆக இருந்தது. அதில் 1 ஆண்டிற்கும் 03 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 155,316 ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மொத்தம் ரூபா 724,002 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.. | பரீட்சித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பெற வேண்டிய மீதிகளைத் தீர்வு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 12,841,906 ஆக இருந்தது. அதில் 03 ஆண்டுகளுக்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 180,000 ஆகவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மொத்தம் ரூபா 1,265,827 தொகையும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | பரீட்சித்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்வு செய்ய வேண்டும். . |

## 3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,600,000 பெறுமதியான வாகனமொன்று மற்றும் பெறுமதி இனங்காணப்படாத 03 வாகனங்கள் 01 முதல் 15 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் செயலற்றதாகவோ அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படாமலோ காணப்பட்டன. | பொறியிலாளர் ஆலோசணையின் பிரகாரம் செயற்படுவதாக. | பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கும், அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தேவைப்பாடு மற்றும் இடஅமைவு தொடர்பாக ஆய்வு செய்யாமல் வாகனங்களை சேவை செய்யும் நிலையம் ஒன்றிற்காக 2022 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 295,000 ஆன High Pressure Pump இயந்திரத்தை பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்காமல் விளைவற்று காணப்பட்டது. | சபைக்கு தொடர்பு படுத்தி தீர்மானம் எடுப்பதாக. | சொத்துக்களைப் பயன்படுத்திய வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டிருந்த மடவள போது வியாபார தொகுதியில் 23 கடைகள் உடைத்து அகற்றப்பட்டு ரூபா 75,308,678 ஆன மதிப்பீட்டின் பேரில் புதிய புதிய வியாபாரக் கடைகள் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட வியாபார தொகுதியை நிர்மாணிப்பதற்கு கட்டட கலைஞர் மதியுரை கட்டணமாக ரூபா 108,000 தொகையும் பொறியியலாளர் மதியரை கட்டணமாக ரூபா 47,000 தொகையும் அளவீட்டு நடவடிக்கை களுக்காக ரூபா 100,000 தொகையுமாக மொத்தம் ரூபா 255,000 தொகையும் 2020-2021 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் உரிய திட்டம் வீதி எல்லைக்கு கோட்டுக்கு உட்பட்டது அல்லாத காரணத்தினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் திட்டம் பரிந்துரைக்கப்பட்டிருக்கவில்லைஇந்த நட்டம் தொடர்பாக வீதிக் கோட்டு எல்லையில் அமைதல் தொடர்பாக முன் ஆய்வு ஒன்று செய்து அதை இனங் கண்டு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் பொறுப்புகளுக்கு உட்படுவதாக அவதானிக்கப்பட்டது. | பரீட்சித்து எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக. | ஒரு சாத்தியவள ஆய்வு நடத்தப்பட்டு, தேவை அடையாளம் காணப்பட்டு, திட்டங்கள் திட்டமிடப்பட்டு, சரியான முறையில் செயல்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கூட்டிணைத்தல் சான்றிதழால் சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த தெல்தெனிய வீதியில் அமைந்துள்ள வியாபார தொகுதி அமைந்துள்ள காணி மற்றும் வீரம்மனாவ சுடலை காணி அமைந்துள்ள காணிக்கு உறுதி இல்லாமையால் சட்டரீதியான உறுதிகள் இல்லாததால் கூட்டிணைப்பு சான்றிதழை உறுதிப்படுத்துவதற்கு வேறு முறையான நடவடிக்கைகள் இருக்கும் போது அதற்கு இணங்காமல் அக்காணிக்காக முறையே ரூபா 200,000 | உரிய தரப்பினருக்கு ஒழுக்காற்று நடைமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | உரிய நடைமுறைகளை பின்பற்றி செயற்பாடுகளை நிறைவேற்றாமை தொடர்பாக பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

தொகையும் ரூபா 300,000 தொகைப் பெறுமதிக்கு விற்பனை உறுதி மூலம் உறுதி பதிவு செய்யப்பட்டிருந்தது.

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது அதில் 11 பதவிகளில் 16 வெற்றிடங்களும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் 05 மிகைகளும் காணப்பட்டன. | பதவியணி மீளாய் வொன்று மேற்கொள்ளப்பட்டு உள்ளுராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பியுள்ளதாக. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து பொது மக்கள் சேவைகளை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டியதுடன் மிகை தொடர்பாக ொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |